**தமிழ்நாடு அரசு**
**சுருக்கம்**

நிலம் - சென்னை மாநகராட்சியில் உள்ள சர்தார் பட்டேல் சாலையில் அமைந்துள்ள வணிக வளாகத்திலுள்ள 46 கடைகளுக்கு மாற்றிடமாக கோட்டூர் கிராமம் புல எண் 1. பிளாக் 29. கோட்டூர் கிராமத்தில் சாலை நிலமாக வகைப்படுத்தப்பட்டுள்ள நிலதில் 232.50 ச.மீ. பரப்பளவை ஒதுக்கீடு செய்ய சென்னை மாநகராட்சி ஆணைருக்கு அனுமதி அளித்து ஆணை வெளியிடப்படுகிறது.

---

**நகராட்சி நிர்வாகம் மற்றும் குடிநீர் வழங்கல் (மாந1) துறை**

அரசாணை (இருபதாண்டு) எண்,81 நாள்20.9.99

படிக்கப்பட்டது

சென்னை மாநகராட்சி ஆணையரின் கடிதம் நி.ம.உ.து. எல்இ7/2247/99 நாள் 29.6.99

- - - -

ஆணை

சென்னை மாநகராட்சி ஆணையர் பட்டேல் சாலையில் பாலம் கட்டுவதற்கு அச்சாலையில் அமைந்துள்ள வணிக வளாகத்திலுள்ள 46 கடைகள் இடையூறாக இருப்பதால் மேற்கண்ட 46 கடைகளுக்கு மாற்றிடமாக புல எண்,1. பிளாக் 29. கோட்டூர் கிராமம் சர்தார் பட்டேல் சாலையில் அமைந்துள்ள சாலை நிலத்தில் சுமார் 232..50 ச.மீ. நிலம் மாற்றிடமாக ஆய்வு செய்யப்பட்டுள்ளது என்றும், மேற்கண்ட நிலம் சாலை நிலம் என வகைப்பட்டிருந்ததாலும்,. இவ்விடத்தில் சாலை ஓரத்தில் பசுமைப் பகுதியாக இருக்க வேண்டுமென்ற எண்ணத்தில் சிறிய பூங்காவாக இருந்து வருகிறது என்றும், ரோட்டரி சங்கத்தினர் பராமரிப்பு செய்து வந்ததாகவும் தற்சமயம் அப்பூங்கா சரிவர பராமரிக்கப்படாமல் பயனற்ற நிலையில் உள்ளது என்றும், மேலும் உரிமம் ரத்து செய்யப்படவுள்ள கடைகளுக்கு மாற்றிடமாக இவ்விடத்தை வழங்கினால் ஏற்கனவே உள்ள கடைகளுக்கு அருகில் அமையப் பெறும் என்றும் மாற்றிடம் வழங்குவதில் ஆட்சேபணை இருக்காது என்றும் தெரிவித்து மேற்கண்ட இடத்தை உரிமம் ரத்து செய்யப்படவுள்ள வணிக வளாகக் கடைகளுக்கு ஒதுக்கீடு செய்ய அரசின் அனுமதியை கோரியுள்ளார். 3.6.99 அன்று நிறைவேற்றப்பட்ட தீர்மான

எண்.478/99 - இல் இதற்காக மாமன்றம் அனுமதி வழங்கியுள்ளது எனவும் சென்னை மாநகராட்சி ஆணையர் தெரிவித்துள்ளார்.

2. சென்னை மாநகராட்சி ஆணையரின் செயற்குறிப்பினை அரசு நன்கு பரிசீலனை செய்தபின் அதனை ஏற்று கீழ்க்கண்டவாறு அரசு ஆணையிடுகிறது.

1. சென்னை மாநகராட்சி சர்தார் பட்டேல் சாலையில் அமைந்துள்ள வணிக வளாகத்திலுள்ள 46 கடைகளுக்கு (பழக்கடைகள் 32 எண்ணிக்கை பூக்கடைகள் 14 எண்ணிக்கை) மாற்றிடமாக கோட்டூர் கிராமம் புல எண்.1, பிளாக் எண்.29ல் கோட்டூர் கிராமம் சர்தார் பட்டேல் சாலையில் உள்ள சாலை நிலமாக வகைப்படுத்தப்பட்டுள்ள நிலத்தின் ஓரத்தில் 232.50 ச.மீட்டர் பரப்பளவு ஒதுக்கீடு செய்ய சென்னை மாநகராட்சி ஆணையருக்கு அரசு அனுமதி அளித்து ஆணை வெளியிடப்படுகிறது.

2. பொது மக்களால் பயன்படுத்தும் சாலையில் ஒரு பகுதியான மேற்படி நிலத்தை, சாலை தவிர வேறு உபயோகத்திற்காக பயன்படுத்த 1919ஆம் ஆண்டு சென்னை மாநகராட்சி சட்டத்தின் பிரிவு 205(1)(சி)ன் கீழ் அனுமதி வழங்கப்படுகிறது.

(ஆளுநரின் ஆணைப்படி)

எஸ். மாலதி
அரசு செயலாளர்ஸி.

பெறுநர்

ஆணையர், சென்னை மாநகராட்சி, சென்னை.3
வழி மாமன்ற தலைவர்,
இயக்குநர், உள்ளாட்சி தணிக்கை, சென்னை.8

நகல்

நகராட்சி நிர்வாகம் மற்றும் குடிநீர் வழங்கல் (வரவு - செலவு)
துறை.சென்னை.9

/ஆணைப்படி/அனுப்பப்படுகிறது/

பிரிவு அலுவலர்